பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை

29 01 2025 **WEDNESDAY** 7 15 **PM**

வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. குடியரசு தின அணிவகுப்பில் பங்கேற்ற முப்படைகள் பாசறை திரும்பும் நிகழ்ச்சி இன்று புதுதில்லியில் நடைபெற்றது.
2. தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகளை பிஜேபி நிறைவேற்றி வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.
3. உத்தரபிரதேசத்தின் பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் மகா கும்பமேளாவில் நேரிட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 30 பேர் உயிரிழந்தனர், 90 பேர் காயமடைந்தனர்.
4. தில்லி சட்டப்பேரவை தேர்தலுக்கான தேர்தல் அறிக்கையை காங்கிரஸ் வெளியிட்டுள்ளது.
5. புரோ லீக் மகளிர் ஹாக்கி போட்டிக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

**>>>>>><<<<<<**

குடியரசு தின அணிவகுப்பில் பங்கேற்ற முப்படைகள் பாசறை திரும்பும் நிகழ்ச்சி இன்று புதுதில்லியில் நடைபெற்றது.

வரலாற்றுச் சிறப்புமிக்க விஜய்சவுக்கில் நடைபெற்ற இந்த அணிவகுப்பினை குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு. ஜெக்தீப் தங்கர், பிரதமர் திரு. நரேந்திர மோடி, பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா மற்றும் அமைச்சர்கள் பார்வையிட்டனர்.

முப்படைகளின் பேண்டு வாத்திய இசையுடன் நடைபெற்ற இந்த அணிவகுப்பு, பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்தது.

(சவுண்ட் பைட் - பேண்டு 29 செகண்ட்ஸ்)

இதற்கிடையே, குடியரசு தின அணிவகுப்பின் சிறந்த அலங்கார ஊர்திகளுக்கான அறிவிப்பு அறிவிக்கப்பட்டுள்ளன.

குடியரசு தினத்தன்று புதுதில்லியில் நடைபெற்ற இந்த அணிவகுப்பில், சிறந்த ஊர்திக்கான முதல் பரிசினை மகாகும்பமேளாவை அடிப்படையாக கொண்ட உத்தரபிரதேச அலங்கார ஊர்தி வென்றுள்ளது.

இரண்டாவது பரிசினை திரிபுரா ஊர்தியும், மூன்றாவது பரிசினை ஆந்திரப்பிரதேச ஊர்தியும் வென்றுள்ளன.

மத்திய அரசு துறைகளின் அலங்கார ஊர்திகளுக்கான முதல் பரிசினை பழங்குடியின அமைச்சகம் வென்றுள்ளது.

**>>>>>><<<<<<**

தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகளை பிஜேபி நிறைவேற்றி வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

தில்லி சட்டப்பேரவை தேர்தலில் பிஜேபி வேட்பாளர்களை ஆதரித்து இன்று பிரச்சாரம் மேற்கொண்டு அவர் பேசினார்.

இந்த தேர்தலில் பிஜேபி வெற்றி பெறும் என்றும் பிரதமர் நம்பிக்கை தெரிவித்தார்.

மக்கள் நலனுக்காக மத்திய அரசு நிறைவேற்றிய திட்டங்களையும் அவர் பட்டியலிட்டார்.

தில்லியில் ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் ஆம் ஆத்மி அரசு, மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண தவறிவிட்டதாகவும் திரு. நரேந்திர மோடி குற்றம் சாட்டினார்.

**>>>>>><<<<<<**

தில்லி சட்டப்பேரவை தேர்தலுக்கான தேர்தல் அறிக்கையை காங்கிரஸ் வெளியிட்டுள்ளது.

இன்று தில்லியில் அக்கட்சியின் மூத்த தலைவர்களான திரு. ஜெய்ராம் ரமேஷ், திரு. **Pawan Khera** ஆகியோர் இதனை வெளியிட்டனர்.

மகளிருக்கு மாதந்தோறும் 2 ஆயிரத்து 500 ரூபாய் வழங்கப்படும், 25 லட்சம் ரூபாய் மதிப்பிலான இலவச மருத்துவ காப்பீட்டு திட்டம், 500 ரூபாய்க்கு சமையல் எரிவாயு சிலிண்டர், 300 யூனிட் வரை இலவச மின்சாரம் உள்ளிட்ட பல்வேறு உறுதிமொழிகள் இந்த தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றுள்ளன.

**>>>>>><<<<<<**

வக்ஃப் மசோதா தொடர்பான நாடாளுமன்ற நிலைக்குழுவின் வரைவு அறிக்கை, மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லாவிடம் நாளை சமர்ப்பிக்கப்படவுள்ளதாக அதன் தலைவர் திரு. ஜெகதாம்பிகா பால் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

இன்று நடைபெற்ற குழுவின் கூட்டத்தில் வரைவு அறிக்கைக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

உறுப்பினர்கள் தெரிவித்த 14 திருத்தங்கள் இதில் இடம்பெற்றிருப்பதாகவும் அவர் கூறினார்.

இந்த மசோதா தொடர்பாக கடந்த 6 மாதங்களாக விரிவாக விவாதிக்கப்பட்டதாகவும் திரு. ஜெகதாம்பிகா பால் தெரிவித்தார்.

**>>>>>><<<<<<**

பிரதமரின் மக்கள் ஆரோக்கிய திட்டத்தின் கீழ், எட்டரை கோடிக்கும் மேற்பட்டோர் இதுவரை பயனடைந்துள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இந்த திட்டத்தின் கீழ், ஒரு லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான இலவச சிகிச்சை பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாக சுகாதாரத்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

தமிழகத்தில் 90 லட்சத்திற்கும் மேற்பட்டோர் இந்த திட்டத்தின் கீழ், இலவச சிகிச்சைகளை பெற்றுள்ளதாக அந்த செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தின் கீழ், பயனடைந்த மாநிலங்களின் பட்டியலில் தமிழகம் முதலிடத்தில் உள்ளதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது இடத்தில் கர்நாடகாவும், மூன்றாவது இடத்தில் ராஜஸ்தானும் உள்ளன.

**>>>>>><<<<<<**

உத்தரபிரதேச மாநிலம், பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் மகா கும்பமேளாவில் இன்று மௌனி அமாவாசையை ஒட்டி, ஐந்து கோடிக்கும் மேற்பட்டோர் புனித நீராடினர்.

கோடிக்கணக்கான பக்தர்கள் பிரயாக்ராஜில் குவிந்ததால், விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இருப்பினும் இன்று அதிகாலை 2 மணியளவில் நேரிட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 30 பேர் உயிரிழந்தாக கும்பமேளாவிற்கான காவல்துறை தலைவர் திரு. வைபவ் கிருஷ்ணா கூறியுள்ளார்.

செய்தியாளர்களிடம் இதனை தெரிவித்த அவர் 90 பேர் இதில் காயமடைந்ததாகவும், காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் கூறினார்.

மீட்புப் பணிகள் உடனடியாக மேற்கொள்ளப்பட்டு, நிலைமை கட்டுக்கள் கொண்டுவரப்பட்டதாகவும் திரு. வைபவ் கிருஷ்ணா தெரிவித்தார்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, பிரதமர் திரு. நரேந்திர மோடி, உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா உள்ளிட்டோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

கூட்ட நெரிசலில் சிக்கி காயமடைந்தவர்களுக்கு, மருத்துவமனைகளில் உயரிய சிகிச்சை வழங்கப்பட்டு வருவதாக அம்மாநில அரசு கூறியுள்ளது.

இதன்பின்னர், பக்தர்கள் புனித நீராடுவது தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் காவல்துறையினர் தெரிவித்தனர்.

இதற்கிடையே, மகா கும்பமேளாவை ஒட்டி அறிவிக்கப்பட்ட சிறப்பு ரயில்கள் எதுவும் ரத்து செய்யப்படவில்லை என்று ரயில்வே தெரிவித்துள்ளது.

இதுகுறித்து சமூகவலைதளங்களில் வெளியாகும் வதந்திகளை நம்ப வேண்டாம் என்றும் ரயில்வே கேட்டுக் கொண்டுள்ளது.

மௌனி அமாவாசை தினமான இன்று 370 சிறப்பு ரயில்கள் இயக்கப்பட்டு வருவதாகவும் ரயில்வே கூறியுள்ளது.

**>>>>>><<<<<<**

ஜார்க்கண்டில் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கையில் இரண்டு நக்ஸலைட்டுகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

மேற்கு **Singhbhum** மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதியில் நக்ஸலைட்டுகள் பதுங்கியிருப்பதாக கிடைத்த தகவலை அடுத்து, பாதுகாப்புப் படையினர் அங்கு தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.

அப்போது இருதரப்பினருக்கும் இடையே துப்பாக்கிச் சண்டை நேரிட்டதாகவும், இதில் நக்ஸலைட்டுகள் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் அம்மாவட்ட காவல்துறையினர் தெரிவித்தனர்.

அப்பகுதியிலிருந்து துப்பாக்கிகளும் பறிமுதல் செய்யப்பட்டிருப்பதாக அவர்கள் கூறினர்.

இதற்கிடையே, சத்திஷ்கரில் 29 நக்ஸலைட்டுகள் இன்று சரணடைந்தனர்.

நாராயன்பூர் மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதியில், அம்மாநில காவல்துறை மற்றும் மத்திய பாதுகாப்புப் படையினர் முன்னிலையில் இவர்கள் சரணடைந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

சரணடைந்தவர்களில் 7 பேர் பெண்கள் என்றும் அவர் மேலும் கூறுகிறார்.

நாராயன்பூரில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகள் தங்களை வெகுவாக கவர்ந்துள்ளதாகவும், இதன் காரணமாக சரணடைந்ததாகவும் நக்ஸலைட்டுகள் தெரிவித்தனர்.

**>>>>>><<<<<<**

தமிழகத்தில் மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் மாநில அரசு செயல்பட்டு வருவதாக ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் திரு. மதிவேந்தன் கூறியுள்ளார்.

நாமக்கல் மாவட்டத்திற்கு உட்பட்ட ஆலாம்பாளையம் பேரூராட்சி மற்றும் ஆயக்காட்டூர் பகுதிகளில் புதிய அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு அடிக்கல் நாட்டி வைத்து அவர் பேசினார்.

மக்களைத் தேடி மருத்துவம் திட்டம் பொதுமக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

**>>>>>><<<<<<**

சென்னை அகில இந்திய வானொலியின் மாநில செய்திப் பிரிவு வழங்கும் 'செய்திச்சுடர்' நிகழ்ச்சியில், பத்ம விருதுகள் குறித்து மூத்த பத்திரிகையாளர் திரு. வெங்கடேஷுடன் எமது நெறியாளர் சுமித்ரா ரத்னம் பங்கேற்ற நேர்காணல் இன்று இடம் பெறுகிறது.

ஒருங்கிணைந்த அலைவரிசையில் இரவு மணி 9.15-க்கு ஒலிபரப்பாகும் இந்த நிகழ்ச்சியை மாநிலத்தில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் அஞ்சல் செய்யும்.

**>>>>>><<<<<<**

புரோ லீக் மகளிர் ஹாக்கி போட்டிக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

**Salima Tete** தலைமையிலான இந்த அணியில், 23 பேர் இடம்பெற்றுள்ளனர்.

இப்போட்டி புவனேஷ்வரில் அடுத்த மாதம் 15ஆம் தேதி தொடங்கி, 25ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

**>>>>>><<<<<<**

தாய்லாந்து மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ரெத்தின சபாபதி – **Amsakarunan** இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.
இன்று நடைபெற்ற ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை 21-18, 21-12 என்ற செட்கணக்கில் தாய்லாந்தின் **Makkasasithorn – Jamtubtim Pannawat** இணையை வென்றது.

**>>>>>><<<<<<**

டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலின் பேட்டிங் பிரிவில் இந்தியாவின் திலக் வர்மா இரண்டாவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

832 புள்ளிகளுடன் அவர் மூன்றாவது இடத்திலிருந்து இரண்டாவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

பந்து வீச்சு பிரிவில் வருண் சக்கரவர்த்தி 25 இடங்கள் முன்னேறி, 679 புள்ளிகளுடன் 5வது இடத்தை பிடித்துள்ளார்.

**>>>>>>END<<<<<<**